இந்திய அரசு

சட்டம் மற்றும் நீதி அமைச்சகம்

सत्यमेव जयते

# ஜம்மு – காஷ்மீர் ஆட்சி மொழிகள் சட்டம், 2020

(எண் 23/2020)

( 2023, அக்டோபர் 31 அன்று இருந்தவாறு )

# THE JAMMU AND KASHMIR OFFICIAL LANGUAGES ACT, 2020

**(No. 23 of 2020)**

**(As on 31st October, 2023)**


தமிழாக்கம்:

இந்திய அரசுக்காக

தமிழ்நாடு மாநிலச் சட்ட ஆட்சிமொழி ஆணையம்

சென்னை

தமிழ்நாடு அரசு எழுதுபொருள் மற்றும் அச்சுத்துறை ஆணையரால் அச்சிடப்பட்டு வெளியிடப்பட்டது

2023

# ஜம்மு – காஷ்மீர் ஆட்சி மொழிகள் சட்டம், 2020

(எண் 23/2020)

# THE JAMMU AND KASHMIR OFFICIAL LANGUAGES ACT, 2020

**(No. 23 of 2020)**

# PREFACE

This edition of the Jammu and Kashmir Official Languages Act, 2020 (No. 23 of 2020) as on 31st October, 2023, containing the Authoritative Texts of that Act in Tamil and the same was published in the Gazette of the India, Extraordinary, Part XV, Section 1, Vol. I, dated 12 thMay, 2023 on Pages from 171 to 173.

The Authoritative Texts in Tamil was published under the authority of the President under clause (a) of section 2 of the Authoritative Texts (Central Laws) Act, 1973 (50 of 1973) and on such publication, it become the authoritative texts of the Act in Tamil.

New Delhi,<br>12th, May 2023.

*(Signed)……*<br>*Secretary to Government of India.*

# முன்னுரை

2023, அக்டோபர் 31 அன்று இருந்தவாறுள்ள ஜம்மு – காஷ்மீர் ஆட்சி மொழிகள் சட்டம், 2020 (எண் 23/2020) இன் இந்தப் பதிப்பு அச்சட்டத்தின் அதிகாரவுரிமைப்படியான தமிழ் வாசகத்தைக் கொண்டுள்ளது, இது 2023, மே 12 ஆம் தேதியிட்ட இந்திய அரசிதழின் சிறப்பிதழ், பகுதி XV, பிரிவு 1, தொகுதி I இன் 171 முதல் 173 வரையிலான பக்கங்களில் வெளியிடப்பட்டது.

இந்த அதிகாரவுரிமைப்படியான வாசகமாகிய தமிழ் மொழிபெயர்ப்பு, அதிகாரவுரிமைப்படியான வாசகங்கள் (மையச் சட்டங்கள்) சட்டம், 1973 இன் (50/1973) பிரிவு 2 இன் கூறு (அ) வின்படி குடியரசுத்தலைவருக்குள்ள அதிகாரத்தின்படி வெளியிடப்பட்டது, அவ்வாறு வெளியிடப்பட்டதன் பேரில், இது தமிழில் அச்சட்டத்தின் அதிகாரவுரிமைப்படியான வாசகம் ஆயிற்று.

புது தில்லி, (ஒப்பம்)……
12, மே, 2023. இந்திய அரசு செயலாளர்.

## THE JAMMU AND KASHMIR OFFICIAL LANGUAGES ACT, 2020

**(No. 23 of 2020)**

CONTENTS


| Sections | | Pages |
|---|---|---|
| 1. | Short title, extent and commencement. | 1 |
| 2. | Definitions. | 1 |
| 3. | Official languages of Union territory. | 2 |
| 4. | Promotion and development of regional languages. | 2 |

# ஜம்மு – காஷ்மீர் ஆட்சி மொழிகள் சட்டம், 2020

## (எண் 23/2020)

### பொருளடக்கம்


| பிரிவுகள் | | பக்கங்கள் |
|---|---|---|
| 1. | குறுந்தலைப்பு, அளாவுகை மற்றும் தொடக்கம். | 1 |
| 2. | பொருள் வரையறைகள். | 1 |
| 3. | ஒன்றியத்து ஆட்சிநிலவரையின் ஆட்சி மொழிகள். | 2 |
| 4. | மண்டல மொழிகளை வளர்த்தலும் மேம்படுத்துதலும். | 2 |

# THE JAMMU AND KASHMIR OFFICIAL LANGUAGES ACT, 2020

**(No. 23 of 2020)**

[26th September, 2020.]

An Act to provide for the languages to be used for the official purposes of the Union territory of Jammu and Kashmir and for matters connected therewith or incidental thereto.

BE it enacted by Parliament in the Seventy-first Year of the Republic of India as follows:—

Short title, extent and commencement.

1. (1) This Act may be called the Jammu and Kashmir Official Languages Act, 2020.

(2) It extends to the Union territory of Jammu and Kashmir.

(3) It shall come into force on such date[1] as the Central Government may, by notification in the Official Gazette, appoint:

Provided that the Administrator may appoint different dates for different areas in the Union territory.

Definitions.

2. In this Act, unless the context otherwise requires,—

(a) "Administrator" means the Lieutenant Governor of the Union territory of Jammu and Kashmir appointed by the President under article 239 of the Constitution;

(b) "Union territory" means the Union territory of Jammu and Kashmir.

---

1. 29th September, 2020, *vide* notification No. S.O. 3394(E), dated 29th September, 2020 see Gazette of India, Extraordinary, Part II, sec. 3 (ii).

# ஜம்மு – காஷ்மீர் ஆட்சி மொழிகள் சட்டம், 2020

**(எண் 23/2020)**

[2020, செப்டம்பர் 26.]

ஜம்மு – காஷ்மீர் ஒன்றியத்து ஆட்சிநிலவரைகளின் அரசு அலுவலக நோக்கங்களுக்காகப் பயன்படுத்த வேண்டிய மொழிகளுக்கும் அதனுடன் தொடர்புடைய அல்லது அதற்குச் சார்வுறுவான பொருட்பாடுகளுக்கும் வகைசெய்வதற்குமானதொரு சட்டம்.

இந்தியக் குடியரசின் எழுபத்து ஒன்றாம் ஆண்டில் நாடாளுமன்றத்தால் பின்வருமாறு சட்டமியற்றப்படுவதாகுக:–

1. (1) இந்தச் சட்டம், ஜம்மு – காஷ்மீர் ஆட்சி மொழிகள் சட்டம், 2020 என்று வழங்கப்பெறும். குறுந்தலைப்பு, அளாவுகை மற்றும் தொடக்கம்.

(2) இது, ஜம்மு – காஷ்மீர் ஒன்றியத்து ஆட்சிநிலவரையை அளாவி நிற்கும்.

(3) இது, மைய அரசு, அதிகாரமுறை அரசிதழில் அறிவிக்கை வாயிலாகக் குறித்திடலாகும் அத்தகைய தேதியன்று[1] செல்லாற்றல் பெறும்:

**வரம்புரையாக:** ஆளுகையர், ஒன்றியத்து ஆட்சிநிலவரையில் வெவ்வேறு பகுதிகளுக்காக, வெவ்வேறு தேதிகளைக் குறித்திடலாம்.

2. இந்தச் சட்டத்தில், தறுவாயின் தேவை வேறானாலன்றி,– பொருள் வரையறைகள்.

(அ) "ஆளுகையர்" என்பது, இந்திய அரசமைப்பின் 239 ஆம் உறுப்பின்படி, குடியரசுத் தலைவரால் பதவியில் அமர்த்தப்பெற்ற ஜம்மு – காஷ்மீர் ஒன்றியத்து ஆட்சிநிலவரையின் துணைநிலை ஆளுநர்

(ஆ) "ஒன்றியத்து ஆட்சிநிலவரை" என்பது, ஜம்மு – காஷ்மீர் ஒன்றியத்து ஆட்சிநிலவரை என்று பொருள்படும்.

---

1. 2020, செப்டம்பர் 29, 2020 செப்டம்பர் 29 ஆம் தேதியிட்ட அறிவிக்கை எண். எஸ். ஓ.3394 (E) ஐ காண்க, இந்திய அரசிதழ், சிறப்பிதழ், பகுதி II, பிரிவு 3 (ii) ஐ பார்க்க.

Official languages of Union territory.

3. With effect from such date as the Administrator may, by notification in the Official Gazette, appoint in this behalf, the Kashmiri, Dogri, Urdu, Hindi and English languages shall be the official languages to be used for all or any of the official purposes of the Union territory:

Provided that the English language may continue to be used, for those administrative and legislative purposes, in the Union territory for which it was being used before the commencement of this Act:

Provided further that the business in the Legislative Assembly of the Union territory shall be transacted in the official language or languages of the Union territory.

Promotion and development of regional languages.

4. (1) The Administrator may, for the promotion and development of regional languages of the Union territory, take necessary steps to strengthen the existing institutional mechanisms such as the Academy of Art, Culture and languages in the Union territory.

(2) The institutional mechanisms referred to in sub-section (1) shall make special efforts for the promotion and development of Gojri, Pahari and Punjabi languages.

3. ஆளுநகையர், அதிகாரமுறை அரசிதழில் அறிவிக்கை வாயிலாக, இதற்கெனக் குறித்திடலாகும் அத்தகைய தேதியிலிருந் செல்திறம் பெறுமாறு, காஷ்மீரி, டோக்ரி, உருது, இந்தி மற்றும் ஆங்கிலம் ஆகிய மொழிகள், ஒன்றியத்து ஆட்சிநிலவரையின் அரசு அலுவலக நோக்கங்கள் அனைத்திற்கும் அல்லது அவற்றில் எதற்கும் பயன்படுத்தப்பட வேண்டிய ஆட்சி மொழிகளாக இருத்தல் வேண்டும்: ஒன்றியத்து ஆட்சிநிலவரை யின் ஆட்சி மொழிகள்.

**வரம்புரையாக:** இந்தச் சட்டத்தின் தொடக்கநிலைக்கு முன்பு ஒன்றியத்து ஆட்சிநிலவரைக்குள் ஆங்கிலமொழி பயன்படுத்தப்பட்டுவந்த அந்த நிருவாக மற்றும் சட்டமியற்றும் நோக்கங்களுக்கு அம்மொழியே தொடர்ந்து பயன்படுத்தப்படலாம்.

**மேலும் வரம்புரையாக:** ஒன்றியத்து ஆட்சிநிலவரையின் சட்டமன்றப் பேரவையில் அலுவல்கள் ஒன்றியத்து ஆட்சிநிலவரையின் ஆட்சி மொழி அல்லது மொழிகளில் நடத்தப்படுதல் வேண்டும்.

4. (1) ஆளுநகையர், ஒன்றியத்து ஆட்சிநிலவரையின் மண்டல மொழிகளை வளர்ப்பதற்காகவும் மேம்படுத்துவதற்காகவும், ஒன்றியத்து ஆட்சிநிலவரையில் கலை, பண்பாடு மற்றும் மொழிகளின் கழகம் போன்ற நிலவுறும் நிறுவனவழிச் செயலமைவுகளை வலுவூட்டத் தேவையான நடவடிக்கைகளை எடுக்கலாம். மண்டல மொழிகளை வளர்த்தலும் மேம்படுத்துதலும்.

(2). (1) ஆம் உட்பிரிவில் சுட்டப்பட்டுள்ள நிறுவனவழிச் செயலமைவுகளானது கோஜ்ரி, பஹாரி மற்றும் பஞ்சாபி மொழிகளை வளர்க்கவும், மேம்படுத்தவும் சிறப்பு முயற்சிகளை மேற்கொள்ளும்.

குறிப்புகள்:

குறிப்புகள்:

தமிழ்நாடு மாநிலச் சட்ட ஆட்சிமொழி ஆணையம்
சென்னை.